# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 196/2024 |
| Deposition of Witness for | : | P.W.7 |
| Name | : | **திரு.பாலகிருஷ்ணன்** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி சிறையில் உள்ளார்)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 17.03.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது வேலாயுதப்பட்டிண காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். நான் 2022 ம் வருடம் தேவகோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 25.01.2022 ம் தேதி காலை 09.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது தேவகோட்டை ராம் நகரை சேர்ந்த வித்யா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகார்மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.20/2022 பிரிவு 457,436,380,511 இதச படி வழக்கு பதிவு செய்தேன். அந்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.7** ஆகும். முதல் தகவல் அறிக்கையின் மேல் வாதியின் புகார் மனுவுடன் இணைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்திற்கும், மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இந்த வழக்கை எனது

விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றே காலை 10.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் இரமேஷ், கருணாகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.த.சா.ஆ 2 பார்வை மகஜர், மாதிரி வரைப்படம் தயார் செய்தேன்.

2. அந்த **மாதிரி வரைப்படம் அ.த.சா.ஆ 8** ஆகும். மகஜரில் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்று பின்பு வழக்கு சாட்சிகளான வித்யா, வீரபாண்டியன், கவிதா, பஞ்வர்ணம், லெட்சுமணன், ரமேஷ், கருணாகரன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேற்படி சாட்சிகளை விசாரணை செய்த வகையிலும், சம்பவ இடத்தை பார்வையிட்ட வகையிலும், புலன் விசாரணையிலும், சம்பவம் நடந்தது உண்மையென தெரியவந்ததால் எதிரிகளை சிவன் கோவில் விலக்கு, காளையார்கோவில், கல்லல், கருதாவூரணி, சிறுவாச்சி விலக்கு ஆகிய இடங்களில் தேடியும் விசாரித்தும், எதிரிகள் குறித்த விபரம் தெரியததால் நிலையம் வந்து மாவட்ட காவல் அலுவலகத்தில் உள்ள விரல் ரேகை பதிவு கூடத்திற்கு தகவல் சொல்லி அங்கிருந்து வந்த ஆய்வாளர் மற்றும் காவல் துறையினர் விரல்ரேகைகள் உள்ளதா என்று ஆராய்ந்து பார்த்த போது, விரல் ரேகைகள் ஏதுவும் பதிவாகவில்லை என்று தகவல் தெரிவித்தார்கள். மேற்படி வழக்கை விசாரணை செய்து வந்த நிலையில் எனக்கு பணி மாறுதல் கிடைத்ததால் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக காவல் நிலைய பொறுப்பில் வைத்து சென்றேன். இது சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. புகார் கொடுக்கும் முன்பு எனக்கு போன் மூலம் தகவல் வந்ததா என்றால் வந்தது, சுமார் 5.45 அல்லது 06.00 மணி இருக்கும். நான் உடனே சம்பவ இடத்திற்கு போகததற்கு ஏதும் காரணம் உள்ளதா என்றால் நான் உடனே சம்பவ இடத்திற்கு சென்றுவிட்டேன். நான் எத்தனை சம்பவ இடத்திற்கு சென்றேன் என்றால் சுமார் 5.45 அல்லது 06.00 மணிக்கு சென்றேன். புகார் மனு ஏற்கனவே எழுதி கொண்டு வந்ததை தான் முதல் தகவல் அறிக்கையாக பதிவு செய்தேன்

என்றால் சரிதான். நான் உடனே பார்வை மகஜர் தயார் செய்தேனா என்றால் வழக்கு பதிவு செய்த பின்னர் தான் தயார் செய்தேன்.

2. சம்பவ இடத்திற்கு 06.45 மணிக்கு செல்லும் போது எரிந்த நிலையில் பொருட்கள் கிடந்ததா என்றால் ஆம், எரிந்த நிலையில் பொருட்கள் கிடந்தது. ஆனால் எந்த, எந்த பொருட்கள் கிடந்தன என குறித்து வைக்கவில்லை. வழக்கு பதிவு செய்த பின்னர் சம்பவ இடத்தை பார்க்கும் போது சம்பவ இடத்தில் எரிந்த நிலையில் எந்த பொருட்களும் இல்லை என்றால் எரிந்த நிலையில் இருந்ததை அணைத்து விட்டோம். நான் தயார் செய்த பார்வை மகஜரில் சம்பவ இடத்தில் எந்த பொருட்களும் இல்லை என குறிப்பிட்டுள்ளேனா என்றால் வேறு எந்த தடயங்களும் இல்லை என குறிப்பிட்டுள்ளேன். புகார் மனுவில் பொருட்கள் திருடு போனதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் காணவில்லை என சொல்லியுள்ளனர். சாட்சிகளை நான் விசாரிக்கும் போது எந்த பொருட்களும் காணவில்லை என சொல்லவில்லை என்றால் சரிதான்.

3. நான் 06.45 மணிக்கு முதலில் சென்று பார்த்த போது அது மனிதனால் தீ வைத்தற்கான அடையாளம் ஏதும் இருந்ததா என்றால் வீட்டின் அறையின் கதவு உடைக்கப்பட்டிருந்தது. அதை பார்வை மகஜரிலோ, மாதிரி வரைப்படத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். சாட்சிகள் நீதிமன்ற விசாரணையில் கதவை ஏதும் உடைக்கவில்லை என்று சாட்சிகள் சொல்லியிருந்தால் அது தவறு. முழுமையாக விசாரித்திருந்தால் தான் அது விபத்தா அல்லது மனிதனால் நடந்ததா என்று தெரியவரும் என்றால் நான் விசாரித்து தெரிந்து கொண்டேன். நான் விசாரணை செய்த பின்பு தான் சட்டப்பிரிவுகளின் கீழ் வழக்கு பதிவு செய்ய இயலும் என்றால் புகாரின் அடிப்படையில் பதிவு செய்தேன்.

4. புகாரின் அடிப்படையில் சட்டப்பிரிவுகளை பதிவு செய்யவில்லை என்றும், அ.சா.1 ன் செல்வாக்கினால் சட்டத்திற்கு முரணான வகையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. நான்

சட்டத்திற்கு முரணான வகையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்திருந்தால் 1மாதம் காலம் தாமதித்து நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கையை அனுப்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றும், காவல் நிலைத்தில் வைத்து மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்தேன் என்றால் சரியல்ல. அ.சா.1 வித்யா கொடுத்த பொய்யான புகாரை சரிவர விசாரணை செய்யாமல், பொய் புகாருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u> இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.03.17 13:00:24 +05'30'

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**